

தலைமைச் செயலகத்தில் நேற்று (09.01.2025) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர போக்குவரத்துக் கழகத்தில், பணிக்காலத்தில் மறைந்த பணியாளர்களின் 4 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், போக்குவரத்து துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண்மை இயக்குநர் செ.நடராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருப்பதி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த

# சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 10 -

ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்த செய்திக் குறிப்பு வருமாறு:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், தாசனூரைச் சேர்ந்த திருமதி மல்லிகா (வயது 55) க/பெ. கிருஷ்ணன் நேற்று முன்தினம் (08.01.2025) ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய சென்றிருந்தபோது, அங்கு சொர்க்கவாசல் திறப்பிற்காக வழங்கப்பட்ட இலவச தரிசனத்திற்கான நுழைவுச்சீட்டை வாங்கும்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தத் துயரமான செய்தியை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் உடனடியாகத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்த திருமதி மல்லிகா அவர்களின் உடலை அவரது சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சார்பில் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த திருமதி மல்லிகா அவர்களின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### இந்தியாவிலேயே பி.எச்.டி. மாணவர்கள் அதிகம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு! நமது வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல்தான்

# துணை வேந்தர் தேர்வுக் குழுவில் 4வது நபரைத் திணிக்க ஆளுநர் முயற்சிக்கிறார்!

## சட்டப்பேரவையில் – உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் குற்றச்சாட்டு!



சென்னை, ஜன.10 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், அண்ணா பல்கலை மாணவி விவகாரம் தொடர்பான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், “இந்தியாவிலேயே பி.எச்.டி. (ஆய்வு) மாணவர்கள் அதிகம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு” என அண்மையில் வெளிவந்த ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல்தான், துணை வேந்தர் தேர்வுக்குழுவில் யு.ஜி.சி. மூலம் 4வது நபரைத் திணிக்க தமிழ்நாட்டின் ஆளுநர் முயற்சிக்கிறார்” என கடுமையாகக் குற்றஞ் சாட்டினார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் கோவி.செழியன் இது குறித்து குறிப்பிட்டதாவது :-

துணை வேந்தர் நியமனம் செய்யாதது குறித்தும், அதனால் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் குறித்தும் உறுப்பினர்கள் வேல் முருகன் உள்ளிட்டோர் இங்கு விவாதித்தார்கள். அதில், உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பத்திகளை ஆய்வு செய்ய பொதுக் கணக்குக் குழு அண்ணா பல்கலைக்கழகம் சென்றபோது, ரூ.68 கோடி அளவுக்கு ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற கருத்தை குறிப்பிட்டு உரையாற்றினார். இது தொடர்பாக பொதுக் கணக்குக் குழு என்ன பரிந்துரை செய்கிறதோ அதை ஏற்று, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணை வேந்தர் நியமனத்தில் உள்ள இடர்ப்பாடுகளால் ஏற்படுகிற சங்கடங்களைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இதுவரையில் பல்லாண்டுகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற உயர் கல்வித் துறை துணை வேந்தர் தேடுதல் குழுவில் 3 நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அதனால்தான் இந்தியாவில், குறிப்பாக உயர் கல்வியில் மற்ற மாநிலங்களைவிட முதலிடத்தில் இருக்கிற மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை இன்றைக்கும் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 7 தினங்களுக்குமுன் வந்த அறிக்கையில் ஆய்வு மாணவர்கள், Ph.D.யை பொறுத்த வரை, இந்தியாவில் இருக்கிற ஆய்வு மாணவர்களில் அதிக எண்ணிக்கை கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை தமிழக அரசும், உயர் கல்வித் துறையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழக ஆளுநர் இந்த முன்னேற் பாட்டை, வளர்ச்சியை பொறுக்க முடியாமல்தான் 3 பேர் கொண்ட தேர்வுக் குழுவிற்குப் பதிலாக யு.ஜி.சி. நியமிக்கிற 4வது நபரைத் திணிக்க முயற்சிக்கிறார். அதைத் தடுக்கிறது நமது அரசு. 4 பேர் நியமித்தால் என்னவாகும்? அதைக் கண்டிக்கிற நிலையில்தான் பல்வேறு கடிதங்கள் மானியக் குழுவிற்கு எழுதி அனுப்பப்பட்டிருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன்புகூட முதலமைச்சர் அவர்கள் மத்திய பல்கலைக்கழகக் குழு, மானியக் குழுவினுடைய அதிகாரத்தைப் பற்றி முழுமையாக கவர்னருக்கு அளித்திருக்கிறார்கள். மாநிலத்தின் உரிமையைக் கட்டிக்காப்பதுதான் தமிழக அரசின் தலையாய கொள்கை என்பதை அண்ணா வழியில், கலைஞர் வழியில் தொடர்ந்து ஆட்சி நடத்துகிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில், இன்றைக்குத் தந்திருக்கிற அந்த அறிக்கையில், கல்வியைச் சாராதவர்களைக்கூட துணை வேந்தர்களாக நியமிக்கலாம் என்ற அதிகாரம் ஆளுநருக்கு. எனவே, அனைத்து உரிமைகளையும் மாநில அரசுக்குப் பெற்றுத் தருகிற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் என்கிற நிலையில், துணை வேந்தர்களை நியமிப்பதற்கு தடையாக இருக்கிற ஆளுநர் செயல்பாடுதான் இவ்வளவு முட்டுக்கட்டைக்கும் காரணம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் குறிப்பிட்டார்.



தூத்துக்குடி மாநகர் 15வது வார்டுக்கு உட்பட்ட திரவியரத்தின நகரில் நியாய விலைக் கடையை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ கீதா ஜீவன் திறந்து வைத்து மக்களுக்கு சர்க்கரை, அரிசி, பருப்பு போன்ற பொருட்களை வழங்கினார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன்,வட்ட செயலாளர் பொன் பெருமாள், மாமன்ற உறுப்பினர்கள் இசக்கி ராஜா, கண்ணன், வட்ட பிரதிநிதிகள் கணேசன், இளங்கோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கல்வி உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகளைக் கண்டித்து இன்று

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணியினர் பங்கேற்க அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜன. 10-

கல்வி உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகளைக் கண்டித்து இன்று, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation - Tamil Nadu) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் கழக மாணவர் அணியினர் பங்கேற்க வேண்டுமாய் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் கல்வி உரிமையையும், மாநில உரிமையையும் பறிப்பதற்கு ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பாசிச அரசு தொடர் முயற்சிகளைச் செய்து வருகிறது. தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் எளிய மக்களின் கல்வியைக் கபளீகரம் செய்வதற்கும், சமூகநீதியைப் பறிப்பதற்கும் செய்த முயற்சிகளைத் தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறது. எனவே, எப்படியேனும் அதைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைத் தடுக்கத் தனது அனைத்து அதிகாரங்களையும், வழிகளையும் பயன்படுத்துகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

அண்மையில் (0601 2025) பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ள வரைவு விதிமுறைகள், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கெடு நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பல்கலைக்கழகங்களின் தனித்தன்மையை, தன்னாட்சியை ஒழித்து, அனைத்தையும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பெயரால், ஆளுநரின் பெயரால் ஒன்றிய அரசே அபகரிக்கும் திட்டமே, பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை நியமிக்கும் வரைவு நடைமுறை ஆகும்.

தரப்படுத்துதல் என்பது போன்ற மாய்மால வார்த்தைகளைப் பயன்படுத்தி, தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காத மாநிலங்களின் மீது அதனைத் திணிக்க பல்வேறு வகையான அதிகார வரம்பு மீறல்களைத் தொடர்ந்து செய்துவருகிறது. அதன் மொத்த வெளிப்பாடுதான் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு அறிக்கை. அதனை ‘மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSOTN)’ முற்றாக நிராகரிக்கிறது.

கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவும், சமூகநீதியைப் பாதுகாக்கவும், ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்ற நிலையை எட்டுவதற்கும் தடையாக அமையும் எதையும் ஒழிப்பது என்றும் உறுதி ஏற்கும் வகையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகள் 2025 [Draft UGC (Minimum Qualifications for Appointment and Promotion of Teachers and Academic Staff in Universities and Colleges and Measures for the Maintenance of Standards in Higher Education) Regulations, 2025] என்பதைக் கண்டித்தும், மாணவர்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையிலும், இந்தியா முழுவதும் உள்ள கல்வியாளர்கள், மாணவர்களிடம் இதன் ஆபத்தை எடுத்துரைக்கும் வகையிலும், முதல் கட்டமாக, இன்று (10.01.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு நடத்தவுள்ளது.

அடுத்தடுத்த நடவடிக்கைகளாக, மாவட்ட அளவில் கருத்தரங்குகளையும், போராட்டங்களையும், கையெழுத்து இயக்கத்தையும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையிலும், ஒன்றிய அரசு கல்வித் துறை மீது நடத்திவரும் தாக்குதலை வெகு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், அனைத்து வகைப் பிரச்சாரங்களிலும் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு, குமரி ஒலிக்கும் நமது கண்டனக் குரல் செங்கோட்டையில் அமர்ந்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செவிப்பறையை கிழிக்கச் செய்திட அடலேறுகளே அணிதிரண்டு வாரீர்.. வாரீர்... என அழைக்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்கள்,

மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு. (FSOTN)

தி.மு.க. மாணவர் அணி,

இந்திய மாணவர் சங்கம் (SFI),

திராவிட மாணவர் கழகம்,

ம.தி.மு.க. மாணவர் அணி,

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (AISF),

முற்போக்கு மாணவர் கழகம் (RSF),

முஸ்லிம் மாணவர் பேரவை (MSF),

சமூகநீதி மாணவர் இயக்கம் (SMI),

மாணவர் இந்தியா,

கேம்பஸ் ஃபிரண்ட் ஆஃப் இந்தியா (CFI),

அனைத்திந்திய கிராமப்புற மாணவர் சங்கம்,

திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாணவர் அணி,

தமிழ்நாடு மாணவர் முன்னணி (TSF) மற்றும் பல்வேறு மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட

மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு. (FSOTN) கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர்

# ஜே.ரவிகுமார் தந்தை என்.பி.ஜம்புலிங்கம் மறைவு!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 10-

நீலகிரி மாவட்டக் கழக துணை செயலாளர், உதகை நகரமன்ற துணைத் தலைவர் ஜே.ரவிகுமார் அவர்களின் தகப்பனார், கழக மூத்த முன்னோடி என்.பி.ஜம்புலிங்கம் (85) அவர்களின் மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளரும் - உதகை நகர்மன்ற துணைத் தலைவருமான ஜே. ரவிகுமார் அவர்களின் தந்தையாரும் - கழக மூத்த முன்னோடியுமான என்.பி.ஜம்புலிங்கம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் ஜே.ரவிகுமார் அவர்களின் குடும்பத்தார்க்கும் - நீலகிரி மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில் மன்னார்குடி கிழக்கு ஒன்றிய பகுதிகளில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் மன்னை.சோம.இளங்கோவன் உரையாற்றினார். ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எண்கண்.மணி, துணை தலைவர் தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகீர் உசேன், பாலமுத்து, தங்க.குணசேகரன், செல்லத்துரை, இளம் பேச்சாளர் விக்னேஸ்வரி, கவிஞர் உதயகுமார், பாலசுந்தரம், சிவசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் பரிசுகள் வழங்கினார்!

# குன்னூர் நகர தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

## நகரக் கழகச் செயலாளர் ராமசாமி தலைமையில்!

நீலகிரி, ஜன. 10 -

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகர திமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சி நகர கழக அலுவலக வளாகத்தில் குன்னூர் நகர செயலாளர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் குன்னூர் சிவசுப்ரமணிய சாமி திருக்கோவில் குருக்கள் மகேஸ்குமார், இமாம் ஜஹாங்கீர், அருட்தந்தை கிரிஸ்டோபர் சாம்ராஜ் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், மேலூர் ஒன்றிய செயலாளர் லாரன்ஸ், கீழ்கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன், உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் ரமேஷ்குமார், மார்டின், சஞ்சீவ்குமார், குன்னூர் நகரமன்ற தலைவர் சுசிலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளான சிலம்பம், சட்டி உடைத்தல், பெண்களுக்கான போட்டிகள், கோல போட்டி போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பத்மநாபன், வினோத்குமார். குன்னூர் நகர நிர்வாகிகள் தாஸ், முருகேசன், சாந்தா, ஜெகநாத் ராவ், பழனிச்சாமி, மணிகண்டன், சார்லி, தலைமை கழக பேச்சாளர்கள் ஜாகீர்உசேன், நகரமன்ற உறுப்பினர்கள் மன்சூர், குமரேசன், ராபர்ட், வசந்தி, காவேரி, செல்வி, பாக்கியவதி, சமீனா, சித்ரா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜெயகுமார். சிக்கந்தர், பிரபாவதி, ஜாகீர், அபிபூர் ரகுமான், மது, மகாலிங்கம், ஹரி, விஜி, பிருந்தா, ஆறுமுகம், விஜி, வினோத்குமார், குன்னூர் நகர இளைஞர் அணியினர் ரஹீம், சேகர், சோட்டு, ஜெயராம்ராஜா, விவேக், கார்த்திக், சுரேஷ், அபாஸ், ஜெய்பதி, சலீம் உட்பட கழக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர்

# ஜே.ரவிகுமார் தந்தை என்.பி.ஜம்புலிங்கம் மறைவு!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் - கழகத்தினர் அஞ்சலி!

நீலகிரி, ஜன. 10-

நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர் - உதகை நகரமன்ற துணைத் தலைவர் ஜே.ரவிகுமார் தந்தை கழக மூத்த முன்னோடி என்.பி.ஜம்புலிங்கம் (85) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (9.1.2025) காலை இயற்கை எய்தினார் என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகரக் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



தேனி தெற்கு மாவட்டம் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2023–2024) ரூபாய் 48.00 இலட்சம் மதிப்பீட்டில் கம்பம் நகராட்சி வார்டு17 டி எஸ் கே . நகரில் புதிய பூங்காவை கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். உடன் நகராட்சி ஆணையாளர் . உமாசங்கர் நகர் மன்ற துணை தலைவர் சுனோதா, செல்வகுமார். நகராட்சி பொறியாளர் ஐயனார், நகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ் குமார், நகராட்சி சுகாதார அலுவலர் அரசகுமார், நகர் மன்ற உறுப்பினர்கள் சம்பத்குமார், மணிகண்டன், சாதிக் அலி, வீருசிக்கம்மாள், விஜயலட்சுமி, ரோஜாரமணி, அன்புக்குமாரி, சுபத்ரா, அபிராமி, லதா, தீபா, சுமதி மற்றும் கழக நிர்வாகிகள் செல்வம், மணிகண்டன், உதயகுமார், சேகர், ஜெகன் பிரதாப், சாதிக் பாட்ஷா, சிவா, ராதாகிருஷ்ணன், தயாளன், பழனிக்குமார், பாண்டியராஜன் மற்றும் நகராட்சி ஊழியர்கள், வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.